# ஆயத்தம் செய்தல்.

## சேர்ந்து விளங்கிக் கொள்வதும் திட்டமிடுவதும்

**பிள்ளையின் பெயர்:** . . . . . . . . . . . . . . . . . . . . . . .

**பேச்சுவார்த்தை செய்யும் திகதி:** . . . . . . . . . . . . . . . . . . . . . .

ஏதாவது விளங்காவிட்டால் அல்லது கஷ்டமாக இருந்தால், அதை விட்டுவிட்டு (ஒன்றும் எழுதாமல்) அடுத்ததற்குப் போக வேண்டும். இந்த தனிப்பட்ட முறையில் ஆயத்தம் செய்யும் பேப்பரை பேச்சுவார்த்தையின் பின் திருப்பி கொண்டு போகலாம்.

யார் யார் எல்லாம் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுகிறார்களோ, அவர்களுக்கு இந்த மாதிரி ஒரு பேப்பர் (தாள்) கிடைக்கும் அதை பேச்சுவார்த்தை செய்ய வரும்பொழுது நிரப்பிக் கொண்டு வர வேண்டும்.

## தற்போதைய நிலைமைபற்றி என்னுடைய பொழிப்புரையின் குறிப்புக்கள்

1-2 புள்ளடிகள் ஒவ்வொரு இடத்திற்கும்

சில சொற்கள், மிகவும் முக்கியமெனில், அதை கீழே கோடிட வேண்டும்

இங்கே ஏதாவது விமர்சனங்களையும் அதோடு அவதானித்தவற்றையும் ஒவ்வொரு இடத்திற்குள்ளும் குறிப்பு எழுத வேண்டும்:

---

*பலம்* ⇧ ⇩ *பிரச்சனை*

### பொதுவான படிப்பு

பிள்ளையினால் முடியும் ... ஒருவர் சொல்வதை அல்லது ஒன்றை கேட்பது, ஒருவர் செய்வதை அல்லது ஒன்றை பார்பது, உணர்வது; கவனிப்பது; பாடலின் சில வரிகள், இராகம், அசைவுகளை உணர்ந்து அதை திரும்ப செய்வது; வடிவங்களை தெரிந்து சொல்லுவது, விபரிப்பது, காட்டுவது; விளையாடும் பொழுது பொருட்களையும் அதன் சம்மந்தத்தையும் கண்டுபிடிப்பது; பிரச்சனையைத் தீர்க்கும் வழிகளைக் கண்டுபிடிப்பதும் அதை உபயோகிப்பதும்; திட்டங்களை செயல்படுத்துவது; திட்டமிடுவது; பயிற்ச்சி செய்வது

---

*பலம்* ⇧ ⇩ *பிரச்சனை*

### பாஷையை கற்றுக்கொள்ளுவதும் சொற்களை அமைத்தலும்

பிள்ளையினால் முடியும் ... ஒருவர் சொல்வதை அதே தொனியுடன் திருப்பி சொல்வது; சொற்களினதும் அடையாளங்களினதும் அர்த்தத்தை விளங்குவது; சரியான வசனம் அமைப்பது; அதன் வயதிற்கேற்ப சொற்களை அமைப்பது; பாஷையை அதற்குத்தக்க மாதிரி கதைப்பது (முதலாவதும் (தமிழிலும்) இரண்டாவது (டொச்) பாஷையிலும்)

---

*பலம்* ⇧ ⇩ *பிரச்சனை*

### கணிதம் படித்தல்

பிள்ளையினால் முடியும் ...எண்ணுவது; இடத்துடன் உள்ள தொடர்பை சொல்லவும் (பின்னால்/முன்னால், மேலே/கீழே); பரிமாணத்தையும் அளவையும் விளங்கிக் கொள்வது அதோடு தனிப்பட்ட முறையில் அல்லது யாரும் சொல்வதின்படி வகைப்படுத்துவது; எண்களை (இலக்கங்களை) தெரிந்து கொள்வது; விதிமுறைகளை தெரிந்து கொள்வது

---

*பலம்* ⇧ ⇩ *பிரச்சனை*

### செய்யவேண்டியவற்றை சமாளிப்பது

பிள்ளையினால் முடியும் ... தனிய அல்லது கூட்டாக சேர்ந்து ஒரு வேலையை செய்தல்; பொறுப்பு எடுத்தல்; ஒரு நாளில் செய்யும் வேலைகளை முறைப்படி செய்தல்; ஒரு வேலையில் மூழ்கியிருத்தல்; சொந்தப் பழக்கவழக்கங்களில் கட்டுப்பாடாக இருத்தல்; சந்தோஷத்திலும் கோபத்திலும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தெரிந்திருத்தல்

---

*பலம்* ⇧ ⇩ *பிரச்சனை*

### செய்திப் போக்குவரத்து

பிள்ளையினால் முடியும்...மற்றவர்கள் சொல்வதை விளங்கிக்கொள்ளவும் தானாக சொல்லவும் (பேச்சுமூலமல்லாததும் பேச்சுமூலமாகவும்); தன்னுடைய எண்ணங்களை தெளிவாக வெளியிட, மற்றவர்கள் அதை விளங்கிக் கொள்ளுகிற மாதிரி (பேச்சுமூலமல்லாததும் பேச்சுமூலமாகவும்); பேச்சுவார்த்தையும் வாதமும் தன்னுடைய ஒரே வயதுடையவர்களுடனும் பெரியவர்களுடனும் செய்யவும்

---

*பலம்* ⇧ ⇩ *பிரச்சனை*

### அசைவும் நடமாட்டமும்

பிள்ளையினால் முடியும் .... சுமாரான அசைவுகளை திட்டமிடவும், சரியாக இணைக்கவும் மேலும் அதை இன்னொருவர் செய்வது போல பார்த்து செய்யவும்; நுண்ணிய அசைவுகளை திட்டமிடவும், சரியாக இணைக்கவும் மேலும் அதை இன்னொருவர் செய்வது போல் பார்த்து செய்யவும்; கீறுவதற்கும் எழுதுவதற்கும் பாவிக்கும் உபகரணங்களை சரியாகப் பாவிக்கவும்

---

*பலம்* ⇧ ⇩ *பிரச்சனை*

### தன்னில் தானே கவனமெடுத்துக் கொள்வது

பிள்ளையினால் முடியும்... உடைகளையும் சப்பாத்தையும் போடவும் கழற்றவும்; சுகாதாரத்திலும், ஆரொக்கியத்திலும், போஷாக்கிலும் கவனம் எடுக்கவும்; ஆபத்தான சூழ்நிலையில் தன்னை காப்பாற்றிக் கொள்ளவும்

---

*பலம்* ⇧ ⇩ *பிரச்சனை*

### மனிதர்களுடன் பழகும் முறை

பிள்ளையினால் முடியும் .... மற்ற ஆட்களுடன் தொடர்பு வைத்திருக்கவும்; மரியாதை பாதுகாப்பு, பொறுமை மற்றவர்களுக்குக் காட்டவும் தான் கடைப்பிடிக்கவும்; ஆட்களை நெருக்கமாகவும் தூரத்திலும் ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்ளவும்; யாராவது குறை சொன்னால் அதை சமாளிக்கவும்; நண்பர்களைக் கண்டுபிடிக்கவும் அவர்களை நண்பர்களாக வைத்துக் கொள்ளவும்

---

*பலம்* ⇧ ⇩ *பிரச்சனை*

### ஓய்வு நேரம், இளைப்பாறும் நேரம், சேர்ந்து இருக்கும் நேரம்

பிள்ளையினால் முடியும் ... சேர்ந்து ஒற்றுமையாக இருக்கிற வாழ்க்கையில் பாடசாலையிலும், குடும்பத்திலும், அயலவர்களுடனும் பங்குபற்றுவது; விளையாட்டிலும் வேறு பொழுதுபோக்குகளிலும் பங்குபற்றுவது; சொந்த விருப்பமான செயல்களில் ஈடுபடுவது



Hinweis zum Druck: Im Drucken-Dialog Seitenanpassung auf "keine" stellen.

Formular drucken | Formular speichern | Formular zurücksetzen